# யார் இந்த யோசவ் வாஸ்? (இலங்கையின் அப்போஸ்தலர்)



## பிறப்பு, வளர்ப்பு, கல்வி

அருளாளர் யோசவ் வாஸ் அடிகள் இந்திய நாட்டின் கோவா மாகாணத்தில் பெனாஉலிம் என்ற இடத்தில் 1651ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 21ம் திகதி பிறந்தார். அடிகளாரது தந்தை கிறிஸ்தோப்பர் வாஸ். தாய் மரியா டி மிரான்டா. அடிகள் ஆறுபிள்ளைகளில் மூன்றாவது பிள்ளை. யோசவ் வாஸ் அடிகள் பிறந்த எட்டாம் நாள் அதாவது 1651ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 28ம் திகதி பெனாஉலிம் நகரில் திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தில் திருமுழுக்குப் பெற்றார். கோவாவின் தென்பகுதியில் அமைந்துள்ள சங்குவால் என்ற தனது தந்தையின் ஊரில் அடிகள் வளர்ந்தார்.

வாஸ் அடிகளாரது பெற்றோர் ஆழ்ந்த மறைப்பற்றுள்ளவர்களாக இருந்தார்கள். எனவே ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறிகளில் தமது பிள்ளைகளை மிகவும் கவனமாக வளர்த்து வந்தனர். செபமும் உயரிய விழுமியங்களும் நிறைந்த ஒரு சூழலில் வளர்ந்ததன் காரணமாக யோசவ் வாஸ் இறைவனுக்கும் அவரது மக்களுக்கும் பணிசெய்யவென தமது வாழ்வை அர்ப்பணித்தார். யோசவ் தனது ஆரம்பக்கல்வியை சங்குவாலிலும் தனது லத்தீன் மொழிக்கல்வியை பெனாஉலிமிலும் நிறைவு செய்துகொண்டு பழைய கோவாவில் அமைந்துள்ள யேசு சபைக்குருக்களின் கல்லூரியில் தனது உயர்கல்வியைத் தொடர்ந்தார்.

## குருவாகத் திருநிலைப்படுத்தப்படல்

இக்காலப் பகுதியில் குருத்துவ வாழ்வில் நாட்டம் கொண்ட யோசவ் வாஸ் புனித அக்குவினோ தோமையார் பெயரில் அமைந்த குருத்துவக்கல்லூரியில் மெய்யியல், இறையியல் கற்று தனது குருத்துவக் கற்கையை வெற்றிகரமாக நிறைவுசெய்தார். 1676ம் ஆண்டு கோவாப் பேராயரான அந்தோனியோ பிரான்டாவோ என்பவரால் இறைவனின் புனித குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

யோசவ் வாஸ் அடிகள் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டபோதும் அவருக்கு எந்தவிதமான குருத்துவ பொறுப்புகளும் வழங்கப்படவில்லை. ஒருவேளை மிகவும் விவேகம் நிறைந்த இந்தக் குருவுக்குப் பொருத்தமான பணியைத் தெரிவுசெய்வது

அவரது பொறுப்பாளர்களுக்குக் கடினமாக இருந்திருக்கலாம். இதன் காரணமாக மறையுரை ஆற்றவும் ஒப்புரவு அருட்சாதனத்தை நிறைவேற்றவும் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆழ்ந்த இறைப்பற்றுக்கொண்ட யோசவ் வாஸ் அடிகள் தமக்கு ஏற்பட்ட இந்நிலை கண்டு மனந்தளரவில்லை. தனது தந்தையின் ஊரான சங்குவாலுக்கு வந்து அங்கே உள்ள ஆண்பிள்ளைகளுக்கென ஒரு லத்தீன் மொழிப்பாடசாலையை ஆரம்பித்தார். அதே வேளை செபத்திலும் பாவசங்கீர்த்தனம் கேட்பதிலும் பங்குக்குருவுக்கு உதவுவதிலும் தனது நேரத்தைச் செலவிட்டார். 1677ம் ஆண்டு சங்குவாலில் அமைந்துள்ள ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் அன்னை மரியாளுக்கு தன்னை முற்றிலும் அர்ப்பணித்து அந்த அர்ப்பணம் தொடர்பாக ஒரு மடல் வரைந்தார்.

## இலங்கை செல்ல விருப்பம்

இக்காலப் பகுதியில் எங்கள் தாயகமான இலங்கை ஒல்லாந்தரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அங்கே இருந்த கத்தோலிக்க குருக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டு கல்வின் மதக்கொள்கை அங்கே இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டுவந்தது. கத்தோலிக்க மறை ஒல்லாந்தரினால் முற்றாகத் தடைசெய்யப்பட்டிருந்தது. இவ்வாறாகக் கத்தோலிக்க மக்கள் அங்கே குருக்கள் இன்றித் தவிப்பதை அறிந்துகொண்ட வாஸ் அடிகள் இலங்கைக்குச் சென்று பணியாற்ற தனது மேலதிகாரிகளிடம் அனுமதி கோரினார். ஆனால் அவரது மேலதிகாரிகளோ கனாரா எனும் இடத்துக்கு ஓர் அவசரப் பணியின் நிமித்தம் அவரை அங்கு செல்லுமாறு பணித்தனர். 1682ம் ஆண்டு அவர் கனாராவுக்குச் சென்று மீண்டும் 1685ம் ஆண்டு கோவாவுக்குத் திரும்பினார். இக்காலப்பகுதியில் கோவாவில் ஆரம்பிக்கப்பட்ட புனித பிலிப்பு நேரியின் ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு துறவறக்குழுமத்துடன் தன்னை இணைத்துக்கொண்டு இலங்கையில் தான் எதிர்கொள்ளவிருக்கின்ற துன்பங்களையும் சவால்களையும் எதிர்கொள்ள ஆன்மீக ரீதியாகவும் உடல் ரீதியாகவும் தன்னைத் தயார்ப்படுத்தினார்.

## இலங்கைக்கான பயணம்

1686ம் ஆண்டு மார்ச் மாதம் கோவாவின் பேராயரின் அனுமதியுடன் இலங்கைக்குச் செல்வதற்கான தனது நீண்ட பயணத்தை ஆரம்பித்தார் வாஸ் அடிகள். தனது மூவேளை செபப் புத்தகத்தையும் திருப்பலி ஒப்புக்கொடுப்பதற்குத் தேவையான பொருட்களை மாத்திரமே அவர் தன்னுடன் எடுத்துச் சென்றார். இரண்டு குருக்களும் ஒரு அருட்சகோதரரும் ஒரு பொதுநிலையினரும் அவருக்குத் துணையாகச் சென்றனர். தனது முன்னைய பணித்தளமான கனாராவில் ஒன்பது மாதங்களைச் செலவிட்டபின் 1687ம் ஆண்டு ஜனவரி மாதம் 3ம் திகதி மலபார் கரையோரம் வழியே பயணமானார். இப்பயணத்தில் ஆபத்துக்களும் சவால்களும் மிகவும் அதிகமாக இருந்த படியால்

யோண் வாஸ் என்ற அவரது உறவினரைத் தவிர மற்றவர்கள் அவரை விட்டுவிட்டு கோவாவுக்குத் திரும்பிவிட்டனர்.

1687ம் ஆண்டு உயிர்ப்பு ஞாயிறு தினத்தில் யோசவ் வாஸ் அடிகள் தூத்துக்குடிக்கு வந்து சேர்ந்தார். அங்கிருந்து தனது துணையாளருடன் யாழ்ப்பாணம் செல்வதற்காகப் படகேறினார். ஒல்லாந்து அதிகாரிகளிடம் பிடிபடாது தன்னைப் பாதுகாத்துக்கொள்ள ஒரு கூலிவேலைக்காரனைப் போல உடையணிந்தே அடிகள் படகுப்பயணத்தை மேற்கொண்டார். பொதுவாக இரண்டு அல்லது மூன்று நாட்கள் எடுக்கும் இக்கடற்பயணம் சீரற்ற காலநிலை காரணமாக இருபது நாட்கள் வரை நீடித்தது. இக்காலநிலை காரணமாக நோய்வாய்ப்பட்டு வாடிவதங்கிய நிலையில் மன்னாரில் அடிகள் இறக்கிவிடப்பட்டார். அங்கே வாந்திபேதி அடிகளாரையும் துணையாளரையும் பீடித்தது. இந்த நோய் காரணமாக இறக்கும் தறுவாயில் இருந்த அடிகளாரையும் அவரது துணையாளரையும் கண்ட நல்மனம் படைத்த ஒரு பெண் தொடர்ச்சியாக அவர்களுக்கு வழங்கிய கஞ்சியால் இருவரும் உயிர்பிழைத்தனர்.

ஒல்லாந்து அதிகாரிகளிடம் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக ஒரு கூலியாள் போலவும் பிச்சைக்காரனைப் போலவும் வேடமிட்டு காலிலே பாதணி எதுவும் அணியாமல் அடிகளாரும் துணையாளரும் யாழ்ப்பாணத்தை நோக்கிப் பயணித்தார்கள்.

## யாழ் சில்லாலையில் மறைமுகமாக மறைப்பணி

யாழ்ப்பாணத்தில் சில்லாலை என்ற ஊரில் கத்தோலிக்கர் மிகவும் அதிகமாக வாழ்வதை அறிந்து அடிகளார் அந்தக் கிராமத்திலே தங்கினார். தான் சந்திக்கும் கத்தோலிக்கரது முகபாவங்களில் ஏற்படும் மாற்றங்களை அவதானிக்கும் பொருட்டு கழுத்திலே செபமாலை அணிந்து வந்தார். இவ்வழிமுறையினால் கத்தோலிக்கர் வாழும் வீடுகளை அடிகளாரால் கண்டுபிடிக்க முடிந்தது. ஒரு வீட்டில் கத்தோலிக்கர்கள் வாழ்கிறார்கள் என்பதை நன்கு உறுதிப்படுத்திய பின் அவ்வீட்டாருக்கு வாஸ் அடிகள் தான் ஒரு கத்தோலிக்க குரு என்பதை வெளிப்படுத்தினார். கத்தோலிக்க குடும்பங்கள் மத்தியில் ஒரு குரு தம் மத்தியில் வந்துள்ளார் என்ற செய்தி பரவவே அடிகளாரின் பாதுகாப்பை உறுதிசெய்யும் பொறுப்பை அவர்கள் மேற்கொண்டனர். குடாநாட்டில் சில்லாலை என்ற ஊர் அநேகமாக முழுமையாகக் கத்தோலிக்கரைக் கொண்ட ஊராகவும் சற்று ஒதுக்குப்புறமாக அமைந்த ஊராகவும் அத்தோடு ஒழுங்கைகளும் குறுக்கு வீதிகளும் நிறைந்த ஊராகவும் காணப்பட்டதால் புதிதாக வரும் ஒருவர் வீட்டைக்கண்டுபிடிக்க சிரமப்படும் நிலை இருந்தது. இந்தக் கிராமம் வாஸ் அடிகள் தங்கியிருக்க ஏற்ற ஊராகக் கத்தோலிக்கப் பெரியோர்களால் தீர்மானிக்கப்பட்டது. அங்கிருந்து இரவு வேளைகளில் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மறைமுகமாக வாழ்ந்த கத்தோலிக்க

சமூகங்களைத் தரிசிக்கவும் அவர்களது ஆன்மீகத் தேவைகளைக் கவனிக்கவும் திருப்பலி ஒப்புக்கொடுக்கவும் அடிகளார் அழைத்துச்செல்லப்பட்டார்.

இவ்வாறாக அடிகளாரின் இரண்டு வருடப்பணியினால் யாழ்குடாநாட்டில் மறைமுகமாக நிகழ்ந்து கொண்டிருந்த கத்தோலிக்க சமய மறுமலர்ச்சி படிப்படியாக வெளியேயும் தெரியத்தொடங்கியது. வாஸ் அடிகளாரின் வருகையைப் பற்றி அறிந்த ஒல்லாந்து அதிகாரிகள் 1689ம் ஆண்டு நத்தார் திருப்பலியின் போது அடிகளாரைக் கைதுசெய்யத் திட்டம் தீட்டினார்கள். இருந்த போதும் அடிகளாரை அவர்களால் கைதுசெய்ய முடியவில்லை.

இந்நிகழ்வுக்குப் பின்னர் நாட்டின் ஏனைய பகுதிகளுக்குச் சென்று ஆன்மீகப்பணியாற்ற வேண்டும் என்ற ஆவல் அடிகளாரின் உள்ளத்தில் ஏற்பட்ட படியால் ஒல்லாந்து அதிகாரிகளின் கையில் பிடிபடாமல் வன்னி ஊடாக புத்தளம் நகருக்கு வந்து சேர்ந்தார் அடிகளார். புத்தளத்திலே கத்தோலிக்கர்கள் அடர்த்தியாக வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அத்தோடு ஏறக்குறை அரைநூற்றாண்டு காலமாக குருக்களின் பணி அந்த மக்களுக்கு கிடைக்காதமையினால் அங்கே சில வாரங்கள் அடிகளார் பணியாற்றினார்.

## கண்டியை நோக்கிய பயணம்

கண்டியில் கத்தோலிக்கருக்கு பூரண மதச்சுதந்திரம் இருந்த படியினால் அங்கு சென்று தமது நிரந்தர வதிவிடத்தை அமைத்துக்கொண்டு பின்னர் அங்கிருந்து ஒல்லாந்தரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு இரகசியமாகச் சென்று மறைப்பணியாற்றுவதும் தமது பிரசன்னம் ஒல்லாந்து அதிகாரிகளின் கவனத்துக்கு வரும் பட்சத்தில் உடனடியாக கண்டிப்பகுதியில் தனது இடத்துக்கு வரலாம் என்ற தமது திட்டம் சிறந்ததென்று அடிகளார் உணர்ந்தார்.

## சிறைவாசம்

ஒரு போர்த்துக்கேயரின் துணையோடு கண்டி நகரை நோக்கிப் பயணமானார் யோசவ் வாஸ் அடிகள். இச்செய்தியை அறிந்த கண்டியரசனின் அரண்மனையில் பணியாற்றிய கல்வினிசத்தைப் பின்பற்றும் ஒரு பிரெஞ்சுக்காரரால் யோசவ் வாஸ் அடிகள் ஒரு ஒற்றர் என்று செய்தி அரண்மனைக்கு வழங்கப்பட்டது. கண்டி நகருக்கு அடிகள் வந்த போது அங்கே அவர் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

வாஸ் அடிகளாருக்கெதிரான குற்றம் பாரதூரமானதாகக் கருதப்பட்டதால் அரசன் அவரைப்பற்றிய தகவல்களை அறிய விசேட கவனம் செலுத்தியது மட்டுமன்றி தானும் அவரைப்பற்றி அறிய நேரடிக்கண்காணிப்பில் ஈடுபட்டான். வெகுவிரைவில் அடிகளார் மதவிடயங்களில் மட்டும் ஈடுபடும் ஒரு துறவி மட்டுமே என்றும் அவரால் எவருக்கும் எவ்வித தீங்கும் ஏற்படாது என்ற உண்மை உறுதியானது. இதன்பின் அவரது

சிறைக்கெடுபிடிகள் தளர்த்தப்பட்டன. இதுவரை தமிழ்மொழியை மட்டுமே அறிந்திருந்த யோசவ் வாஸ் அடிகளார் இனிமேல் சிங்கள மொழியறிவும் தேவை என்பதை உணர்ந்து தமக்குக் கிடைத்த நேரத்தில் சிங்கள மொழியையும் கற்கத் தொடங்கினார்.

கண்டியரசன் விமலதர்ம சூரியனுக்கு வாஸ் அடிகள் மீது ஏற்பட்டிருந்த நன்மதிப்பு மேலும் அதிகமானதால் சிறைவாசத்தின் கடுமை தளர்த்தப்பட்டதுடன் மதவழிபாடுகளுக்கு ஏதாவது ஆட்சேபனை இருக்குமா என்பதைச் சோதித்தறிய அடிகளார் ஒரு வழியைக் கையாண்டார்.

தனது துணையாளர் ஜோணின் துணையோடு ஒரு சிறிய கொட்டில் கோவிலை அமைத்து அங்கு காலை மாலை இரவுகளில் செபிக்கத்தொடங்கினார். பின்னர் எவ்வித எதிர்ப்புக்களும் விமர்சனங்களும் தோன்றாத படியால் அங்கு 1691ம் ஆண்டு முதற்தடவையாக கண்டியில் நத்தார் இரவுத் திருப்பலியை அடிகளார் ஒப்புக்கொடுத்தார். அதைத்தொடர்ந்து படிப்படியாகக் கத்தோலிக்கர் அச்சமின்றி அங்கு வரத்தொடங்கினர்.

## இறைவேண்டுதலால் மழைபெய்யச்செய்தல்

1696ம் ஆண்டில் ஒரு பெரும் வரட்சி கண்டியில் ஏற்பட்டது. அவ்வேளையில் பெரும் பஞ்சம் ஏற்படக்கூடிய ஆபத்து உணரப்பட்டது. அரசன் விமல தர்ம சூரியன் வாஸ் அடிகளாரிடம் இறைவேண்டுதல் செய்யும்படி வேண்டியதைத் தொடர்ந்து அடிகளாரும் அரண்மனைக்கு முன் உள்ள திறந்த வெளியில் ஒரு பீடம் அமைத்து ஒரு சிலுவையை நட்டு வேண்டுதலில் ஈடுபடவே வேண்டுதல் முடிய முன்னரே கடும் மழை பெய்யத்தொடங்கியது. இதனால் வாஸ் அடிகளார் மீதும் கத்தோலிக்க சமயத்தார் மீதும் அங்கிருந்த அனைவரதும் மதிப்பும் மேலும் உயரத் தொடங்கியது. இதற்குப்பின் வாஸ் அடிகள் எந்தவொரு தடையுமின்றி தனது மறைப்பணியை முன்னெடுத்துச் செல்ல முடிந்தது.

இக்காலப்பகுதியில் யோசவ் வாஸ் அடிகளார் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பயணஞ்செய்து கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத் தேவையைக் கவனித்து வந்தார். தொடர்ந்து சில ஆண்டுகளில் அவரது துறவறசபையைச் சார்ந்த மேலும் சில குருக்கள் அவரோடு இணைந்து அவரது மறைப்பணிக்கு வலுச்சேர்த்தார்கள்.

## இறப்பு

ஏறத்தாழ 24 வருடங்கள் எமது நாட்டில் மறைப்பணியாற்றி எமது தாய்நாட்டில் கத்தோலிக்க விசுவாசம் அழியாமல் பாதுகாத்த யோசவ் வாஸ் அடிகள் நோய்வாய்ப்பட்டு 1711ம் ஆண்டு ஜனவரி மாதம் பதினாறாம் திகதி கண்டி நகரில் இறந்தார்.

## முத்திப்பேறு மற்றும் புனிதநிலைக்கு உயர்த்தப்படல்

*1995ம் ஆண்டு ஜனவரி மாதம் 21ம் திகதி முன்னைய திருத்தந்தை இரண்டாம் ஜோண் போல் அவர்கள் அடிகளாரை முத்திப்பேறு நிலைக்கு உயர்த்தினார். நாளை மறுதினம் அதாவது 14-1-2015 காலை 8.30 மணிக்கு காலிமுகத்திடலில் தான் ஒப்புக்கொடுக்கும் திருப்பலியில் எமது திருத்தந்தை பிரான்சீஸ் அவர்கள் இலங்கையின் அப்போஸ்தலரான யோசவ் வாஸ் அடிகளாரை புனித நிலைக்கு உயர்த்துவார்.*

*புனித பவுல் ஆலயம்*

*பேர்கன், நோர்வே*

*12-01-2015*